**கலவான பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 18 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கலவான பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் அண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் அழிவடையச் செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் ரூபா 26,595 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய ஏக்கர் வரி மீதி ரூபா 148,143 ஆக இருந்த போதிலும், அது ரூபா 465,437 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 317,294 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய சம்பள மீளளிப்பு ரூபா 1,626,422 ஆக இருந்த போதிலும், அது ரூபா 1,689,712 ஆக கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 63,290 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய உள்ளபடியான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 863,875 ஆக இருந்த போதிலும், அது ரூபா 512,283 ஆக கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக செயற்பாட்டு வருமானம் ரூபா 351,592 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த முத்திரை வரி ரூபா 8,995 ஆக இருந்த போதிலும் அது ரூபா 44,807 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக ரூபா 35,812 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2017 திசெம்பர் 31 இல் அறவிட வேண்டியிருந்த நிர்மாண கடன்பட்டோர் ரூபா 17,764,974 ஆக இருந்த போதிலும், அது ரூபா 5,438,373 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக கடன்பட்டோர் ரூபா 12,326,601 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 56,428 தொகையான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வாராந்த சந்தை இறைச்சி / மீன் கடைகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 875,836 ஆக இருந்த போதிலும், அப்பெறுமதி ரூபா 5,068,391 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையின் காரணாக கடன்பட்டோர் ரூபா 4,192,555 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 17,230 ஆக இருந்த போதிலும், அப்பெறுமதி ரூபா 2,949,963 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 2,932,733 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் நானாவிதக் கடன்கொடுத்தோர் ரூபா 21,743,052 ஆக இருந்த போதிலும், அது ரூபா 27,241,260 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக கடன்கொடுத்தோர் ரூபா 5,498,208 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் 03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 1,480,649 வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 30,347,288 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானம் போன்றவற்றுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | | |
| (i) 149 ஆம் பிரிவு | - | சபை அதிகாரப்பிரதேசத்தில் பேணப்படுகின்ற 02 ஹோட்டல்களில் முன்னைய ஆண்டின் வருமானத்தில் 01 சதவீதம் வரையிலான கட்டணமொன்று, அது பதிவு செய்யப்பட்ட ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 162 ஆம் பிரிவு | - | சபையின் நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்காக மீளாய்வாண்டில் 189 சிவப்பு அறிவித்தல்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் அனேகமானவைக்கு போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) | நிதிப்பிரமாணம் 396 | 32,846 | விநியோகிக்கப்பட்ட திகதி முதல் 06 மாதங்களை விஞ்சிய கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத 04 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 5,400,159 | 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கேள்வி பிணை வைப்பு, ஒப்பந்த நிறுத்தி வைத்தல் மற்றும் நானாவித வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,041,023 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,776,084 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,927,856 | 3,043,821 | 3,194,633 | 3,903,524 | 7,530,470 | 6,199,746 | 2,272,424 | 4,205,148 |
| வாடகை | 6,317,300 | 4,016,018 | 4,067,850 | 5,082,076 | 4,368,460 | 328,490 | 2,927,425 | 5,133,908 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,372,051 | 542,185 | 471,185 | - | 1,206,747 | 329,975 | 329,975 | - |
| ஏனைய வருமானம் | 9,218,437 | 8,583,336 | 1,510,087 | 16,536,420 | 10,227,575 | 9,438,712 | 10,122,612 | 9,501,284 |

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது வீதவரியும் வரியும், அனுமதிப்பத்திரக்கட்டணம், சேவைகளுக்கான கட்டணம், பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும், ஏனைய வருமானம் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவினை விட முறையே 19 சதவீதம், 36 சதவீதம், 86 சதவீதம், 24 சதவீதம், 73 சதவீதம், 95 சதவீதம் மற்றும் 43 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

2.2.3 வீதவரியும் வரியும்

(அ) ஆதன வரி

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதன வரி மீதி ரூபா 2,137,500 ஆக இருந்ததுடன், அதில் 05 வருடங்களை விட மேற்பட்ட காலமாகக் கொண்டு வரப்படுகின்ற 69 அலகுகளிலிருந்து அறவிட வேண்டியதாக ரூபா 548,526 தொகை காணப்பட்டது. நிலுவைப் பணத்தை அறவிடுவது தொடர்பாக சபையின் செயற்படுநிலை நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) ஏக்கர் வரி

2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிட வேண்டிய நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 2,137,500 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற 169 அலகுகளிலிருந்து அறவிட வேண்டியதாக கூட்டுமொத்தமாக ரூபா 131,464 தொகை காணப்பட்டது. அந்த நிலுவை மீதியை அறவிடுவதற்காக சபை போதியளவான பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான கலவான சனிக்கிழமை சந்தைக்காக 2016 ஆம் ஆண்டின் 03 மாதங்களுக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 408,400 கூட்டுத்தொகையான நிலுவை வாடகை மற்றும் தண்டப்பணம் என்பன 2018 மே வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான கலவான வெத்தாகல வீதி மீன் கொட்டகைக்காக 2014 ஆம் ஆண்டில் 03 மாதங்களுக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 169,576 தொகையான நிலுவை வாடகை மற்றும் தண்டப்பணம் என்பன 2018 மே வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குரிய பொதுச் சந்தையில் 15 ஆம் இலக்க இறைச்சிக் கடைக்காக 2014 ஆம் ஆண்டின் 08 மாதங்களுக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 495,339 தொகையான நிலுவை வாடகை மற்றும் தண்டப்பணம் என்பன 2018 மே வரையிலும் அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 08 தொழில்

முயற்சிகள் அந்த அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமையின் காரணமாக சபைக்கு ரூபா 35,200 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்ததுடன், அந்த தொழில் முயற்சிகளை நடாத்திச் செல்லும் போது ஏற்படக்கூடிய சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பான மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய நிறுவனங்களை இனங்காண்பதற்காக சபையினால் முறையான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட வேண்டிய நிறுவனங்களை இலகுவாக இனங்காணக் கூடிய வகையில் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் சபை அதிகாரப்பிரதேசத்தில் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக சபையின் பொறுப்புக்கள் உரிய பிரகாரம் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.6 முத்திரைக் கட்டணம்

2015 சனவரி முதல் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக அறவிட வேண்டிய நிலுவை முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபைக்கு அறிவித்திருந்த போதிலும் அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

2012 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 47,340 பெறுமதியான மதிப்பிழந்த காசோலைகளின் கணக்கு மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

#### ஊழியர் கடன்

ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் இடமாற்றம் பெற்றமை மற்றும் சேவையை கைவிட்டுச் சென்றமையின் காரணமாக அறவீடுகள் நிலுவையான இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 32,352 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

### 3.4 பெறுகைகள்

#### பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| **முறைமைகள்** | **குறைபாடுகள்** |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) செலவினங்கள் இனங்காணப்படாமை. |
| | (ii) வருமானம் குறைத்துப் பதியப்பட்டமை |
| | (iii) பேரேட்டுக் கணக்குகள் பட்டோலைகளுடன் இணங்காமை |
| | (iv) செலவின பேரேடு நிதிக்கூற்றுக்களுடன் இணங்காமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |